# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 7,076 — 1920 ம் ௵ தைமீ 9 ந் திகதி வெள்ளிக்கிழமை.

## Part IV.—நான்காம் பாகம்.

### காணி விற்பனவுகள்.

**No. 901, N. P.**—1920 ம் ஆண்டு மாசி மாதம் 23 ந் திகதி, திங்கட் கிழமை காலை 10 மணிக்கு மன்னார்க் கச்சேரியில் தன் ஆபிசில் வட மாகாணத்து மன்னார் டிஸ்திறிக்கின் உதவிக் கவண்மேந்து ஏசன்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித் துண்டுகளை, அரசாட்சியாரால் காணி விற்பனவைப்பற்றி செய்யப்பட்டிருக்கும் ஒழுங்குகளின் பிரகாரம் ஏலத்திற்கூறி விற்கப்படும் அல்லது தீர்ந்துவிடப்படும் அல்லது வேறு மாதிரியாக விற்கப்படும். 17 காணித் துண்டுகள், வடமாகாணத்து மாந்தை, முசலிப் பகுதிகளிலிருக்கின்றது.

நீர்ப்பாய்ச்சப் பிரதம பிளான் நம்பர் 1. மாந்தைதெற்கு, குறிச்சி—இலுப்பைக்குளம். உரித்தாளி—அரசாட்சியார்.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விபரம். | விசாலம். ஏ. | றூ. | ப. | தரிப்புவிலை ஏக்கர் ஒன்றுக்கு. ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 45 | காட்டுப்பூமி .. | என். தருமலிங்கம் .. | பறட்டைக்காடு .. .. | 9 | 3 | 37 | 30 |
| 46 | ஷை .. | — .. | வாய்க்காலுக்காக விடப்பட்ட காணி.. | 0 | 1 | 22 | —* |
| 47 | ஷை .. | எம். சோமசுந்தரம் .. | பறட்டைக்காடு .. .. | 7 | 0 | 37 | 30 |
| 48 | ஷை .. | — .. | வாய்க்காலுக்காகவும் றோட்டுக்காகவும் விடப்பட்ட காணி | 4 | 2 | 21 | —* |
| 76 | ஷை .. | — .. | வாய்க்காலுக்காக விடப்பட்ட காணி.. | 0 | 2 | 17 | —* |
| 77 | மோட்டை .. | — .. | குளத்தின் ஒரு பகுதி .. | 2 | 0 | 0 | —* |
| 79 | காட்டுப்பூமி .. | ஏ. மாரிமுத்து, வண்ணார் பண்ணை மேற்கு | பறட்டைக்காடு .. .. | 11 | 0 | 17 | 30 |
| 75 | ஷை .. | கே. மாரிமுத்துப்பிள்ளை | ஷை .. .. | 10 | 1 | 27 | 30 |
| 74 | ஷை .. | கே. ஆறுமுகம்பிள்ளை .. | ஷை .. .. | 10 | 3 | 8 | 30 |
| 71 | ஷை .. | கே. சின்னத்துரை .. | ஷை .. .. | 8 | 2 | 14 | 30 |
| 33 | இலுப்பைக்குளத்துக் காடு | வீ. நாகலிங்கம் .. | ஷை .. .. | 9 | 3 | 37 | 30 |
| 49 | காட்டுப்பூமி .. | கே. கந்தையா .. | ஷை .. .. | 9 | 3 | 37 | 30 |
| 50 | ஷை .. | எஸ். கதிரேசபிள்ளை .. | ஷை .. .. | 9 | 0 | 12 | 30 |
| 57 | ஷை .. | கே. கதிரேசபிள்ளை .. | ஷை .. .. | 10 | 0 | 0 | 30 |
| 58 | ஷை .. | எஸ். முனியப்பபிள்ளை .. | ஷை .. .. | 7 | 3 | 33 | 30 |
| | | நானாட்டான் மேற்கு. | குறிச்சி—வண்ணாகுளம். | | | | |
| 256 | துலக்கிடிச்சமோட்டைக் கமம் | ரீ. ஏ. எதிரமனசிங்கி . | பறட்டைக்காடு .. .. | 0 | 3 | 24 | 30 |
| 257 | ஷை .. | — .. | ஷை .. .. | 1 | 0 | 19 | 30 |

* விற்பனவுகளல்ல.

எல்லாக் காணித் துண்டுகளும் தண்ணீர்பாயககூடியவை. இககாணிகளை வாங்குகிறவர்கள் ஒரு வருஷத்துககு ஒரு ஏககருககு இரண்டு ரூபாய் வீதம் தண்ணீர் வரி கொடுககவேண்டும், அவ்வரி தேசாதிபதி அவர்களுககுத் தகுந்ததென்று தோற்றுகிற நிலபரத்துக்குத் தககபடி மாற்றப்படககூடும்.

இக்காணிகளைப்பற்றிய வேறு விபரங்களை மன்னார் உதவி ஏசன்றுத்துரை அவர்களிடத்திலும் அவைகளின் படங்களைப்பற்றி அளவுகாரியப் பெரிய துரையிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

கொலோனியல் சக்கிறத்தாரின் கந்தோர்,
கொழும்பு, 1920 ம் ௵ தைமீ 7 ந் உ.

ஜெறயிம் தொம்சன்,
கொலோனியல் சககிறத்தார்.

---

### அரசாட்சியாரின் தேவைக்காகிய காணி விளமபரங்கள.

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் துறைமுகத்தை "மெயின் லைன்" உடன் றெயிலினால் சேர்க்கிறதற்காக என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது:—

பிரதமபடத்து இல. 17,095. குறிச்சி—முத்துவால்.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | 340 வரியின் இலக்க வீடு .. | ஓட்டால் வேய்ந்த சுண்ணாம்பினால் கட்டப்பட்ட கட்டிடம் .. | வி. மார்தினிஸ பெறயிறா .. | 0 | 0 | 5·03 |
| 2 | 341 ம், 341A ஷை .. | ஓட்டால் வேய்ந்த சுண்ணாம்பினால் கட்டப்பட்ட 2 கடைகள் | எல். எம். கவிருன் .. | 0 | 0 | 4·37 |
| 3 | — .. | காலடி பாதை .. .. | ஷை .. | 0 | 0 | 0·63 |
| 4 | தல்காவத்தை .. | வெறு நிலம் பெலப் அற்ற குடிசை | ஒ. டன் யோசவ் .. | 0 | 0 | 3·12 |
| 5 | 342 வரியின் இல. வீடு .. | ஓட்டால் வேய்ந்த சுண்ணாம்பு கட்டிடத்தின் பகுதி | — .. | 0 | 0 | 2·62 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதி யவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனால், அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1920 ம் ஞு மாசிமாசம் 2 ந் தேதியன்று 11 மணிக்கு காலமே இந்தக் கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1920 ம் ஞு தைமீ 6 ந் உ.

ஜே. ஜீ. பிறேசர்,
மேல்மாகாண அரசாட்சி ஏசண்டு.

## உரிமைபெறும் பாழ்நிலத்தின் முன்னறிவித்தலகளைக் குறித்த விளம்பரங்கள்.

[அறிவித்தல் இல. 7,460, கொழும்பு.]

1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் வெண் நிலங்களைப்பற்றிய அறிவித்தல்.

இதிலே பின்னர்ச் சொல்லப்படும் காணி அல்லது காணிகளில் உடந்தையுள்ளவர்களென உரித்துப்பேசுபவர்கள் யாருமுண்டானால், அவர்கள் 1920 ம் ஞு (ஜனவரி) தைமீ 9 ந் தேதியிலிருந்து மூன்று மாசத்துள்ளே கொழும்புக் கந்தோரில் மேல்மாகாணம் கொழும்பு நீர்கொழும்பு உதவி அரசாட்சி ஏசென்று அவர்கள் முகதாவில் முகாமுகமாயேனும் அல்லது எழுத்து மூலமாயேனும் தெரிபட்டு சொல்லப்பட்ட காணிகளுக்கு அல்லது ஒன்றிலேனுக்கும் அல்லது அதிலே யாதும் உடந்தைக்கு உரித்துண்டெனச் சாதித்தாலன்றி, சொல்லப்பட்ட உதவி அரசாட்சி ஏசென்று அவர்களுக்கு மேற் சொல்லப்பட்ட சட்டங்களினால் கொடுக்கப்பட்டிருக்கும் தத்துவங்களின் பிரகாரம் உரித்துப்பேசப்படாததாகிய குறித்த காணிகள் அல்லது அப்படிப்பட்டவைகள் முடிகுரிய என அவர்களுடைய கையொப்பத்தோடு எழுத்திலே வெளிப்படுத்துவார்கள் என்பதை அறிந்துகொள்க.

அ. பீ. பூன்,
கொழும்பு நீர்கொழும்பு டிஸ்திறிக்கின் உதவி அரசாட்சி ஏசென்று.

சொல்லப்பட்ட காணிகளின் விவரம்.

மேல் மாகாணத்தில் கொழும்பு டிஸ்திறிக்கில் சல்பிற்றிகோறளை உடுகாபற்று கிரிவத்துடுவ கிராமத்தில் இத்துடன் அணைத்திருக்கும் படப்பிரதியில்* விவரித்தபடியே கீழ்க்குறிக்குங் காணித்துண்டுகள் :—

| துண்டு. | காணியின் பெயர். | பிரதமபட இலக்கம் 16,601. | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|---|
| 1 | அழுவோகாலந்த அல்லது இஸ்கோலவத்தை | .. .. .. | 1 3 10 |
| 2 | ஷை | .. .. .. | 2 0 25 |
| 3 | ஷை. | .. .. .. | 0 3 6 |
| | | | 4 3 1 |

எல்லைகளாவன: வடகிழக்கு-வி. சைமன் பெறயிறுவாலும் மற்றவர்களாலும் உருத்தாடப்படும் தெல்காவத்தையும், காலடிபாதையும்; கிழக்கு-வி. சைமன் பெறயிறுவாலும் மற்றவர்களாலும் உருத்தாடப்படும் தெல்காவத்தை; தென்கிழக்கு-135,507 ம் உருமைப்படத்தில் விவரித்த காணியால்; தென்மேற்கு-எ. என். வவுஅப்புவாலும் மற்றவர்களாலும் உருத்தாடப்படும் டியப்பொறுகாகும்வுற; மேற்கு-எ. சன்சிகாமியும் மற்றவர்களாலும் உருத்தாடப்படும் பின்வலகும்வுற; வடமேற்கு-135,359 ம் உருமைப்படத்தில் விவரித்த காணியால், பாதையுங், 135,506 ம் உருமைப்படத்தில் காட்டிய காணியால்.

*இங்கிலீசின் மூன்றும் பாகம் 2 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

[அறிவித்தல் இல. 7,461, களுத்துறை.]

1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம் ஆண்டுகளின் வெண் நிலங்களைப்பற்றிய அறிவித்தல்.

இதிலே பின்னர்ச் சொல்லப்படும் காணி அல்லது காணிகளில் உடந்தையுள்ளவர்களென உரித்துப்பேசுபவர்கள் யாருமுண்டானால், அவர்கள் 1920 ம் ஞு (ஜனவரி) தைமீ 9 ந் தேதியிலிருந்து மூன்று மாசத்துள்ளே களுத்துறைக் கந்தோரில் மேல மாகாணம் களுத்துறை உதவி அரசாட்சி ஏசென்று அவர்கள முகதாவில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனுந் தெரிபட்டு சொல்லப்பட்ட காணிகளுக்கு அல்லது ஒன்றிலேனுக்கும் அல்லது அதிலே யாதும் உடந்தைக்கு உரித்துண்டெனச் சாதித்தாலன்றி, சொல்லப்பட்ட உதவி அரசாட்சி ஏசென்று அவர்களுக்கு மேற் சொல்லப்பட்ட சட்டங்களினால் கொடுக்கப்பட்டிருக்கும் தத்துவங்களின் பிரகாரம் உரித்துப்பேசப்படாதாகிய குறித்த காணிகள் அல்லது அப்படிப்பட்டவைகள் முடிக்குரியஎன அவர்களுடைய கையொப்பத்தோடு எழுத்திலே வெளிப்படுத்துவார்கள் என்பதை அறிந்துகொள்க.

ரீ. ஏ. ஹொற்சன்,
களுத்துறை உதவி அரசாட்சி ஏசென்று.

குறிக்கப்பட்ட காணிகளின் விபரம்.

மேல் மாகாணம் களுத்துறை டிஸ்திறிக் றைகம் கோறளையில் முனவத்தேபகேபத்துவில் பத்தகட என்னுங் கிராமத்தில் இத்துட னணைக்கப்படும் படப்பிரதியில்* விபரித்தபடியே கீழ்க்குறிக்குங் காணித்துண்டுகள் :—

| காணித்துண்டு. | காணிப் பெயர். | பிரதமபடம் 16,936. | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|---|
| 1 | பொறலுகெற்றியஓவிற்ற | .. .. .. | 3 0 9 |
| 2 | ஷை | .. .. .. | 2 1 3 |
| | | | 5 1 12 |

எல்லைகளாவன: வடக்கு-தொலுலஎல; கிழக்கு-பாத்தகடவிலிருந்து வயல்வெளிக்குப் போகும் கிராமவழிப் பாதை; தெற்கு-கீனற்றிதெணிய, கலுகாஓவிற்ற, புல்வக்வகுறுஓவிற்ற (முடி சேமித்திருக்கும் நிலம் 13,438 ம் பிரதமபடத்தின் 22,091 ம் துண்டுக் காணி), 256,695 ம் உரிமைப்படத்தில் விபரித்திருக்குங் காணி; மேற்கு-256,695 ம், 297,711 ம் உரிமைப்படத்தில் விபரித்திருக்குங் காணிகள்.

* இங்கிலிசின் மூன்றும் பாகம் 2 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்குக.

## 1912 ம ஆண்டின் 8 ம் இலக்கச்சட்டத்தின்கீழ் அறிவித்தல.

1920–21 ம் வருஷத்துக்கு சாராயத் தவறணைகளைப்பற்றி ஊர்ச்சனங்களின் சம்மதம் அறிவதைக்குறித்த விளம்பரம்.

மத்திய மாகாணம் மாத்தளை டிஸ்திறிக் உதவி ஏசன்றுத்துரையவர்கள் 1919 ம் ஆண்டு ஆவணிமாதம் 12 ந் திகதியையும் 94 ம் இலக்கத்தையுங்கொண்ட குடிவகை விளம்பர பிரமாணங்களின் 5 ம் பிரமாணத்தில் அவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தைக்கொண்டு தவறணையிலிருக்கும் பத்துகளில் வசிக்கும் குடிசனங்களில் தலைவரிப்பணம் கொடுப்பவர்களின் 100 க்கு 75 பெயர் அந்தத் தவறணைகள் இருக்கிற இடங்களில் இருப்பதற்கு மாறுவென்று அறிவதற்கு பின் சொல்லப்படும் திகதியும் இடமும் நியமனம் செய்திருக்கிறாரென்று இத்தால் சகலரும் அறியவேண்டியது.

மாத்தளை என்னு மிடத்திலுள்ள சாராயத் தவறணையைப்பற்றி யறிய மாத்தளை பொரோன் மெமோரியல் ஹோலில் 1920 ம் ஆண்டு மாசிமாதம் 6 ந் திகதி பின்னேரம் 1 மணிக்கும் 4·30 மணிக்கிடையில்.

மாத்தளைக் கச்சேரி,
1920 ம் ஞு தைமாதம் 5 ந் திகதி.

ஈ. ரீ. மிலிங்ற்றன்,
உதவி அரசாட்சி ஏசன்று.

H. R. COTTLE, ACTING GOVERNMENT PRINTER, COLOMBO, CEYLON.